1973 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ-இ) விவர அறிக்கை யொன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டிப்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்

*627 வினு—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வைகை அணையிலிருந்து ஆண்டிப்பட்டிக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான நீர் வழங்குத் திட்டத்தின் ஆய்வு முடிக்கப்பட்டு, பொது விவரச் செயற்குறிப்புகள் இப்பொழுது முடிவு பெற்றுள்ளன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, as a Member of the Committee on Estimates I had an occasion to see that area--the other Members of the Committee also saw it. It is really a very dry area and it gives an appearance of almost a desert and it remains in the rain-shadow area and by the side of the Vaigai Dam. Unless some special scheme is implemented, the area cannot be improved and the green revolution cannot take place. So may I know whether the present proposal will be implemented as early as possible ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக அந்தப் பகுதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். கேள்வி, ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான நீர் வழங்குத் திட்டத்தைப்பற்றியது. முதல் கட்டமாக இந்தக் காரியம் நடைபெறுகிறது. அவர்கள் சொன்னதையும் மனத்திலே கொண்டு அந்தப் பகுதி மேலும் முன்னேறுவதற்கான வழி வகைகளை அரசு ஆராயும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : I only stated about Andipatti and not other areas.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி குடி தண்ணீர்த் திட்டத்திற்காகத் தேவைப்படும் தண்ணீர் வைகை

@ 673-676 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

அணைத் தேக்கத்திலிருந்து எடுக்கப்படுகிறதா? அல்லது வேறு எந்த முறையில் தண்ணீர் எடுக்க இந்தத் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் வைகை யாற்றிலிருந்து தண்ணீர் எடுக்க இந்தத் திட்டத்தின்மூலம் உத்தே சிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆய்வு மதிப்பீட்டுக்காக ரூ. 19,500 என்று கணக்கிடப்பட்டு, 23—8—1971-இல் ஏற்பு அளிக்கப்பட்டு, ஆய்வுச் செலவு பேரூராட்சியால் மேற்கொள்ளப் பட்டு, ஆய்வு வேலை இப்பொழுதுதான் முடிவுற்றிருக்கிறது. இப் பொழுது அவுட்லைன் ப்ரோபோசல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதனுடைய இறுதி மதிப்பீட்டைச் சொல்ல முடியாது. அவுட்லைன் ப்ரோபோசலின்படி ரூ. 24.22 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவாகும் என்றும், தொடர்ச் செலவு ஆண்டுக்கு ரூ. 87,000 ஆகும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அவுட் லைன் ப்ரோபோசல்தான்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: வைகை அணை யிலிருந்து மதுரைக்குத் தண்ணீர் கொண்டுபோக அணைக்கட்டில் இரண்டு துவாரங்கள் போடப்பட்டிருக்கின்றன. மதுரை நகரத் தில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பதாலும் அதுபோன்று இன்னும் பல பகுதிகள் இருப்பதாலும், இந்தத் துவாரங்கள் வழியாகத் தண்ணீர் சப்ளைசெய்ய ஏற்பாடு செய்ய அரசு ஆராயுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மூலக் கேள்வி ஆண்டிப் பட்டியைப் பொறுத்தது. அதுபற்றிய விவரங்கள்தான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோருவதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆண்டிப்பட்டியை ஒட்டியிருக்கக் கூடிய செக்கம்பட்டியில் தண்ணீர்ப் பற்றுக்குறை இருக்கிறது.

1973 ஏப்ரல் 5]

இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாகத் துவக்குவதற்கும், செக்கம்பட்டிக்கும் இதை விஸ்தரிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இந்த ஆண்டிப்பட்டி குடி தண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதன்மூலம் 14 கிராமங்கள் பயன் அடைகின்றன. குன்னூர், அரப்படிதேவன்பட்டி, கல்லுப்பட்டி, பிராதுகாரன்பட்டி, கதிரப்ப கவுண்டன்பட்டி, திம்மலாபுரம், முத்தனம்பள்ளி, மலையாண்டிபுரம், மலையப்பட்டி, ரெங்கசமுத்திரம், ஸ்ரீரெங்கபுரம், கரிசல்பட்டி, சண்முகசுந்தரபுரம், பரயப்பட்டி ஆகிய இந்தப் பதினான்கு கிராமங்கள் பயன்பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கிராமத்திற்கான திட்டமும் வேறு பல திட்டங்களும் விரைவில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

மாயூரம் மகளிர் கல்லூரிக்கான கட்டடம்

*628 வினா—திரு. என். கிட்டப்பா:

திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் அரசினர் ஞானாம்பிகை மகளிர் கல்லூரிக்கான கட்டட வேலை துவங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், கட்டட வேலை எப்போது முடியும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) செப்டம்பர் மாதத்தில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அதற்கான மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ரூ. 13,35,000-க்கு ஏற்பு வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் சனவரித் திங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.